# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.133/2025

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தமிழ்வாணன் | Father's Name | : | செல்வராஜ் |
| Village | : | கொற்கை | Taluk | : | திருத்துறைப்பூண்டி |
| Calling | : | | Age | : | 36 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 24th day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொற்கையில் வசித்து வருகிறேன். நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. போலீசார் விசாரித்தார்கள்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:25:37 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 03.09.2024 ம் தேதி மாலை 6.00 மணியளவில் பரமசிவம் என்பவரது வீட்டில் திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமல்பிரிவு காவல் ஆய்வாளர் விசாரித்துக் கொண்டிருந்தார் எனவும் அப்போது அங்கு வந்த வீரமணியையும் என்னையும் சாட்சியாக இருக்க சொன்னார்கள் எனவும் பரமசிவம் அனுமதியின்றி சாராயம் காய்ச்சியதற்காக வழக்கு பதிவு செய்துள்ளதாகவும் அது சம்மந்தமாக வரைபடமும் பார்வை மகஜரும் எங்கள் முன்னிலையில் தயார் செய்தார்கள் எனவும் அதில் வீரமணி முதல் சாட்சியாகவும் நான் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம் எனவும் சொன்னால் தவறு. எதிரி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:25:45 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.133/2025

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தனசேகரன் | Father's Name | : | சுப்பிரமணியன் |
| Village | : | திருவாரூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 46 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 24th day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.09.2024 அன்று திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது மாலை 5.00 மணியளவில் திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமல்பிரிவு ஆய்வாளர் கார்த்திகா தலைமையில் தலைமை காவலர் சுரேஷ், முதல்நிலை காவலர் 881 சத்தியராஜ் ஆகியோருடன் ரோந்து பணியிலிருந்தபோது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.24 16:25:51 +0530

சேவிக்காடு மருத்துவமனை தெருவில் உள்ள ஒரு வீட்டில் பரமசிவம் என்பவர் சாராயம் விற்பதாக கிடைத்த தகவலின் பேரில் அந்த வீட்டிற்கு சென்றபோது அங்கிருந்து தப்பிக்க முயன்றவரை விசாரிக்க தன் பெயர் பரமசிவம் எனவும் இது தன் வீடு என சொன்னதன் பேரில் அவரது வீட்டை சோதனை செய்தபோது 100 லி. பிடிக்க கூடிய 2 பேரலில் ஊறல் இருந்தது. அது தவிர 3 ஒரு லிட்டர் பாட்டில்களில் 2 பாட்டில்களில் முழு அளவிலும் ஒரு பாட்டிலில் பாதியளவும் சாராயம் இருந்தது. அதை நுகர்ந்து பார்த்தபோது ஒருவித விஷ வாடை வீடியது. ஒரு டியூப்புடன் ஒரு பாத்திரமும் ஒரு பெரிய மற்றும் ஒரு சிறிய 2 அலுமினிய பாத்திரங்களும் ஒரு கேஸ் அடுப்பும் 20 லி. பிடிக்க கூடிய வெள்ளை நிற வெற்று கேன் ஒன்றும் இருந்தன. அவரை விசாரித்தபோது ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதல் சாட்சியாகவும் 2 வது சாட்சியாக தலைமை காவலர் சுரேசும் கையெழுத்து போட்டோம். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1**. அப்போது மாலை 5.15 மணியிருக்கும். 6.15 மணியளவில் ஒரு கேஸ் அடுப்பு, டியூப்புடன் கூடிய ஒரு பாத்திரம், 2 அலுமினிய பாத்திரங்கள், 20 லி. பிடிக்க கூடிய வெள்ளை நிற வெற்று கேன் 1, சாராய ஊறலுடன் இருந்த 100 லி. பிடிக்க கூடிய 2 பேரல்கள், 1 லி. பிடிக்க கூடிய 3 பாட்டில்கள் ஆகியவை இருந்தன. அந்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:25:57 +0530

கைப்பற்றுதல் மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் 2 வது சாட்சியாக தலைமை காவலர் சுரேசும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.2**. மேற்படி அயிட்டங்கள் **சா.பொ.1 முதல் சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பேரல்களில் இருந்த ஊறலை 650 மிலி பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதம் மாதிரிக்காக எடுக்கப்பட்டு SHO ஷீல் வைக்கப்பட்டது. மேற்படி 2 கண்ணாடி பாட்டில்கள் **சா.பொ.6, சா.பொ.7**. 6.45 மணிக்கு மீதமுள்ள ஊறல்கள் மற்றும் 2 பேரல்களை அந்த இடத்திலேயே அழிக்கப்பட்டது. அழிப்பு மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் 2 வது சாட்சியாக தலைமை காவலர் சுரேசும் கையெழுத்து போட்டோம். அந்த அழிப்பு மகஜர் **அ.சா.ஆ.3**. அதே இடத்தில் ஒரு லிட்டர் பிடிக்க கூடிய 3 பாட்டில்களில் இருந்த சாராயத்திலிருந்து 650 மிலி பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதம் மாதிரிக்காக எடுக்கப்பட்டு SHO ஷீல் வைக்கப்பட்டது. மேற்படி 2 கண்ணாடி பாட்டில்கள் **சா.பொ.8, சா.பொ.9**. சா.பொ.6 முதல் சா.பொ.9 ன் புகைப்படம் **அ.சா.ஆ.4**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:26:02 +0530

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் கைப்பற்றுதல் மகஜர், ஒப்புதல் வாக்குமூலம், அழிப்பு மகஜர் தயாரிப்பு, எதிரி கைது ஆகிய நடைமுறைகள் முடிவடைந்த பிறகு காவல் நிலையம் சென்று முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரி. முதல் தகவலறிக்கை பதிவு செய்த நேரம் 02.09.2024 இரவு 8.30 மணி என்றால் சரி. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக சொல்லப்படும் நேரம் 02.09.2024 அன்று மாலை 5.15 மணி என்றால் சரி. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கு கு.எண் 473/2024 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. ஒப்புதல் வாக்குமூலம் வழக்கிற்காக எதிரிக்கு எதிராக காவல் துறையினரால் ஜோடிக்கப்பட்டது என்றால் தவறு. அதனால்தான் அன்றைய தினம் மாலை 5.15 மணிக்கே கு.எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. ஊறல் வைத்திருந்ததாக சொல்லப்படும் 2 பேரல்களும் அன்றைய தினம் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். ஊறலே வைத்திருக்கவில்லை எனவும் அதனால்தான் பேரல் கைப்பற்றப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. ஆய்வாளரது விசாரணையில் நான் ஆஜர் எதிரி 3 பிளாஸ்டிக் பாட்டில்களில் வெள்ளை நிற திரவம் சாராய வாடையுடன் வைத்திருந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரி. மேற்படி 3 பிளாஸ்டிக் பாட்டில்களும் இந்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:26:11 +0530

வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரி. சம்பவ இடத்திலிருந்து எதிரி, 2 நீல நிற பேரல்கள் ஆகியன காவல் துறையினரால் புகைப்படம் எடுக்கப்பட்டது என்றால் சரி. அந்த புகைப்படம், குறுந்தகடு ஆகியன நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் முதல் தகவலறிக்கை பதிவு செய்த ஆய்வாளர் சம்பவ சமயத்தில் எனது மேலதிகாரி என்றால் சரி. மேலதிகாரி கேட்டுக் கொண்டதன் பேரில் எதிரியை இந்த வழக்கில் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:26:16 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.133/2025

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுரேஷ் | Father's Name | : | பிச்சைமுத்து |
| Village | : | மன்னார்குடி | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 38 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 24th day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மன்னார்குடி போக்குவரத்து ஒழுங்கு பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.09.2024 அன்று திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது மாலை 5.00 மணியளவில் திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமல்பிரிவு ஆய்வாளர் கார்த்திகா தலைமையில் தலைமை காவலர் தனசேகரன், முதல்நிலை காவலர் 881 சத்தியராஜ் ஆகியோருடன் ரோந்து பணியிலிருந்தபோது எங்களுக்கு கிடைத்த ரகசிய

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:26:22 +0530

தகவலின்படி சேவிக்காடு மருத்துவமனை தெருவில் உள்ள ஒரு வீட்டில் பரமசிவம் என்பவர் சாராயம் விற்பதாக கிடைத்த தகவலின் பேரில் அந்த வீட்டிற்கு சென்றபோது அங்கிருந்து தப்பிக்க முயன்றவரை விசாரிக்க தன் பெயர் பரமசிவம் எனவும் இது தன் வீடு என சொன்னதன் பேரில் அவரது வீட்டை சோதனை செய்தபோது 100 லி. பிடிக்க கூடிய 2 பேரலில் ஊறல் இருந்தது. அது தவிர 3 ஒரு லிட்டர் பாட்டில்களில் 2 பாட்டில்களில் முழு அளவிலும் ஒரு பாட்டிலில் பாதியளவும் சாராயம் இருந்தது. அதை நுகர்ந்து பார்த்தபோது ஒருவித விஷ வாடை வீடியது. ஒரு டியூப்புடன் ஒரு பாத்திரமும் ஒரு பெரிய மற்றும் ஒரு சிறிய 2 அலுமினிய பாத்திரங்களும் ஒரு கேஸ் அடுப்பும் 20 லி. பிடிக்க கூடிய வெள்ளை நிற வெற்று கேன் ஒன்றும் இருந்தன. அவரை விசாரித்தபோது ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் 2 வது சாட்சியாகவும் முதல் சாட்சியாக தலைமை காவலர் தனசேகரனும் கையெழுத்து போட்டோம். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5**. அப்போது மாலை 5.15 மணியிருக்கும். 6.15 மணியளவில் ஒரு கேஸ் அடுப்பு, டியூப்புடன் கூடிய ஒரு பாத்திரம், 2 அலுமினிய பாத்திரங்கள், 20 லி. பிடிக்க கூடிய வெள்ளை நிற வெற்று கேன் 1, சாராய ஊறலுடன் இருந்த 100 லி. பிடிக்க கூடிய 2 பேரல்கள், 1 லி. பிடிக்க கூடிய 3 பாட்டில்கள் ஆகியவை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:26:28 +0530

இருந்தன. அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் முதல் சாட்சியாக தலைமை காவலர் தனசேகரனும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆகவும் மேற்படி அயிட்டங்கள் சா.பொ.1 முதல் சா.பொ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பேரல்களில் இருந்த ஊறலை 650 மிலி பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதம் மாதிரிக்காக எடுக்கப்பட்டு SHO ஷீல் வைக்கப்பட்டது. மேற்படி 2 கண்ணாடி பாட்டில்கள் ஏற்கனவே சா.னபொ.6, சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 6.45 மணிக்கு மீதமுள்ள ஊறல்கள் மற்றும் 2 பேரல்களை அந்த இடத்திலேயே அழிக்கப்பட்டது. அழிப்பு மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் முதல் சாட்சியாக தலைமை காவலர் தனசேகரனும் கையெழுத்து போட்டோம். அந்த அழிப்பு மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதே இடத்தில் ஒரு லிட்டர் பிடிக்க கூடிய 3 பாட்டில்களில் இருந்த சாராயத்திலிருந்து 650 மிலி பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதம் மாதிரிக்காக எடுக்கப்பட்டு SHO ஷீல் வைக்கப்பட்டது. மேற்படி 2 கண்ணாடி பாட்டில்கள் ஏற்கனவே சா.பொ.8, சா.பொ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சா.பொ.6 முதல் சா.பொ.9 ன் புகைப்படம் ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:26:35 +0530

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் கைப்பற்றுதல் மகஜர், ஒப்புதல் வாக்குமூலம், அழிப்பு மகஜர் தயாரிப்பு, எதிரி கைது ஆகிய நடைமுறைகள் முடிவடைந்த பிறகு காவல் நிலையம் சென்று முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரி. முதல் தகவலறிக்கை பதிவு செய்த நேரம் 02.09.2024 இரவு 8.30 மணி என்றால் சரி. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக சொல்லப்படும் நேரம் 02.09.2024 அன்று மாலை 5.15 மணி என்றால் சரி. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கு கு.எண் 473/2024 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. ஒப்புதல் வாக்குமூலம் வழக்கிற்காக எதிரிக்கு எதிராக காவல் துறையினரால் ஜோடிக்கப்பட்டது என்றால் தவறு. அதனால்தான் அன்றைய தினம் மாலை 5.15 மணிக்கே கு.எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. ஊறல் வைத்திருந்ததாக சொல்லப்படும் 2 பேரல்களும் அன்றைய தினம் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். ஊறலே வைத்திருக்கவில்லை எனவும் அதனால்தான் பேரல் கைப்பற்றப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. ஆய்வாளரது விசாரணையில் நான் ஆஜர் எதிரி 3 பிளாஸ்டிக் பாட்டில்களில் வெள்ளை நிற திரவம் சாராய வாடையுடன் வைத்திருந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரி. மேற்படி 3 பிளாஸ்டிக் பாட்டில்களும் இந்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:26:40 +0530

வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரி. சம்பவ இடத்திலிருந்து எதிரி, 2 நீல நிற பேரல்கள் ஆகியன காவல் துறையினரால் புகைப்படம் எடுக்கப்பட்டது என்றால் சரி. அந்த புகைப்படம், குறுந்தகடு ஆகியன நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் முதல் தகவலறிக்கை பதிவு செய்த ஆய்வாளர் சம்பவ சமயத்தில் எனது மேலதிகாரி என்றால் சரி. மேலதிகாரி கேட்டுக் கொண்டதன் பேரில் எதிரியை இந்த வழக்கில் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:26:49 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.